# “1970களின் பின் கிழக்கிலங்கையின் நவீன தமிழ் நாடகப்போக்குகள்”

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
01 JUN 2018
Vantharumoolai
Chenkalady

LIBRARY
23 OCT 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

திரு.குமாரசாமி ரவிச்சந்திரன்

EU/PGS/2008/M.Phil (DT)/08

M.phil10
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
இலங்கை

2018

PROCESSED
Main Library, EUSL

---

உள்ளடக்கம் பக்கம்


மேற்பார்வையாளரின் உறுதியுரை

ஆய்வாளரின் உறுதியுரை

நன்றியுரை

ஆய்விற்கான முன்னுரை i-viii

அத்தியாயம் ஒன்று

இலக்கிய மீளாய்வு

1.1. இலக்கிய மீளாய்விற்கான எண்ணக்கரு விளக்கம் 01

1.2. இலக்கிய மீளாய்வு செய்யப்படும் நூல்கள் 02

1.2.1.சி.மௌனகுரு, "ஈழத்து தமிழ் நாடக அரங்கு" 02-07

1.2.2.கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு, க.திலகநாதன் "அரங்கு ஓர் அறிமுகம்" 08-10

1.2.3.சி.மௌனகுரு "அரங்கியல்" 10-13

1.2.4.க.சிதம்பரநாதன் "சமூக மாற்றத்திற்கான அரங்கு" 13-17

1.2.5.பாலசுகுமார் "உலக நாடக அரங்கு" 18-20

1.2.6.பாலசுகுமார் "திருகோணமலை பிரதேச தமிழ் நாடக அரங்கப் பாரம்பரியம்"20-21

1.2.7க..ஸ்ரீகணேசன் "ஈழத்து கலை இலக்கிய உலகு விமர்சனம் கட்டுரைகள்"21-25

1.2.8.வ.இன்பமோகன் "மரபுக்குப்பின் மட்டக்களப்பில் நாடகங்கள்" 25-27

1.3.சிறு ஆய்வேடுகள் "சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் பிரிவு இறுதி வருடத்தில் நாடக அரங்கியல் பயில்கின்ற மாணவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டவைகளும்"அதற்கான இலக்கிய மீளாய்வுகளும் 27-28

1.3.1. 2006ஆம் ஆண்டில் வெளிவந்தவை 28-30

1.3.2. 2007ஆம் ஆண்டில் வெளிவந்தவை 31-33

1.3.3. 2008ஆம் ஆண்டில் வெளிவந்தவை 33-35

1.4.சிறு ஆய்வேடுகள் "கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் விசேட கற்கை நெறியில் இறுதியாண்டில் பயில்கின்ற மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது" அதற்கான இலக்கிய மீளாய்வும் 35-39

1.5. ஆய்வேடுகளுக்கான முடிவுரை 39

1.6. சிறுசஞ்சிகைகள் 39

1.7. இணையத் தளங்கள் 40

1.8. இலக்கிய மீளாய்விற்கான முடிவுரை 40-42

அத்தியாயம் இரண்டு

நவீனம் தொடக்கம் பின் காலனியம் வரை அரங்கை நோக்கிய புரிதல்கள்

2.1. நவீனம், நவீனமாதல் பின்னணிகள் 43

2.1.1.நவீனம், நவீனத்துவம், நவீனமாதல் தொடர்பான கருத்துக்களும் அதன் செயல் வினைகளும். 43-54

2.1.2 .நவீனத்து பின்னணியில் எழுந்த கோட்பாடுகள், 54-67

2.1.2.1.நவீனத்துவத்தின் தோற்றத்திற்கான பின்னணிகள் 54-56

2.1.2.2.நவீனத்துவத்தின் பின்னணியில் எழுந்த கலை, அழகியற் கோட்பாடுகள் 57-60

2.1.2.2.1.மனோரதிய வாதம் 60-61

2.1.2.2.2.மிகையுணர்வு வாதம் 62-63

2.1.2.2.3.இயற்பண்பு வாதம் 63-67

2.1.2.3 நவீனத்துவத்தின் வடிவமாக .யதார்த்த வாதம் 67-69

2.1.2.4 யதார்த்த வாதமும் அரங்கும் 69-73

2.2 பின்நவீனம், பின்நவீனத்துவம், பின்நவீனமாதல் தொடர்பான கருத்துக்களும் அதன் செயல் வினைகளும் :

2.2.1 பின்நவீனத்துவத்தின் தோற்றத்திற்கான பின்னணிகள் 74-85

2.2.2 பின்நவீனத்துவ பின்னணியில் எழுந்த கலை அழகியற் கோட்பாடுகள் 86

2.2.2.1 மனப்பதிவு வாதம் : 86-88

2.2.2.2. வெளிப்பாட்டு வாதம் : 88- 92

2.2.2.3 .குறியீட்டு வாதம் 93-95

2.2.2.4 சர்ரியலிஷம் 96-97

2.2.3. பின்நவீனத்துவ அரங்கு 97-98

2.3 காலனித்துவம, காலனித்துவமாதல் தொடர்பான கருத்துக்களும் அதன் செயல் ·வினைகளம் :

2.3.1 காலனித்துவம் பின் காலனித்துவத் தோற்றத்திற்கான பின்னணிகள் : 98-99

2.3.2 காலனித்துவம் பின் காலனித்துவ பின்னணியில் எழுந்த கலை அழகியல் கோட்பாடுகள் 100

2.3.3 பின்காலனித்துவ அரங்கு 100-103

2.4 நவீனத்துவத்தினதும், பின்நவீனத்துவத்தினதும், பின்காலனித்துவ வருகைக்குப் பின் எழுந்த கலை இலக்கிய கோட்பாடுகள் தமிழ் மரபில் உள்வாங்கப்பட்ட விதம் அத்தியாயம் இரண்டு அடிக்குறிப்பு 103-114

அத்தியாயம் மூன்று

**பண்பாடு பற்றிய படிப்பும் சமுக நிலையினூடாக பண்பாட்டை விளங்கிக் கொள்வதும் ஒவ்வொரு பண்பாடுகளிலும் அரங்கு எவ்வாறு மேற்கிளம்பியது என்றும் நோக்கப்படுவதோடு கிழக்கிலங்கையில் பண்பாட்டில் அரங்குகளும் அதன் தன்மைகளும் நோக்கப்படும்.**

3.1. பண்பாடு பற்றிய கருத்தியலை விளங்கிக் கொள்ளல் 115-121

3.2. அரங்கு பற்றிய கருத்தியலை விளங்கிக் கொள்ளல் 121-125

3.3. கலைகளுக்கும் பண்பாட்டிற்குமான தொடர்பினை விளங்கிக் கொள்ளல் 125-127

3.4. அரங்கிற்கும் பண்பாட்டிற்குமான தொடர்பினை விளங்கிக் கொள்ளல் 128-130

3.5. .பிற பண்பாடுகளின் அரங்கின் தன்மைகளை விளங்கிக் கொள்ளல் 130-131

3.5.1. கிரேக்கப் பண்பாட்டில் அரங்கு 131-133

3.5.2. உரோம பண்பாட்டில் அரங்கு 133-134

3.5.3 .ஐரோப்பிய பண்பாட்டில் நாடகம் 134

3.5.3.1.மத்தியகாலப் பண்பாட்டில் கிறிஸ்தவ நாடக மரபு 134-137

3.5.3.2.எலிசபத்திய காலத்தில் இங்கிலாந்தின் நாடகப் பண்பாடு 137-140

3.5.3.3.19ஆம் நூற்றாண்டுகளுக்குப்பின் மேலைத்தேய வரலாற்றில் அரங்கப் பண்பாடு 141-142

3.5.3.4 .ஐரோப்பாவில் பிரான்ஸ், இத்தாலியப் பண்பாட்டில் அரங்கு 142-143

3.6. மேற்குலகப் பண்பாட்டில் நவீன அரங்கும் அதன் ஆளுமையாளர்களும் 144

3.6.1.யதார்த்த அரங்கில் ஹென்றிக் இப்சனின் தாக்கமும் அவரது நவீன அரங்கை இனங்கண்டு கொள்ளுதலும் 144-146

3.6.2.யதார்த்த அரங்கில் அன்ரன் செக்கோவ்வின், தாக்கமும் அவரது நவீன அரங்கினை இனங்கண்டு கொள்ளுதலும் 146-147

3.6.3.யதார்த்த அரங்கில் கொன்ஸ்ராரின் ஸ்ரெனிஸ்லவஸ்கியின் தாக்கமும் அவரது நவீன அரங்கை இனங்கண்டு கொள்ளுதலும் 147

3.6.4.யதார்த்த எதிர் அரங்கில் மேயர் கோல்டின் தாக்கமும் அவரது நவீன அரங்கை இனங்கண்டு கொள்ளுதலும் 148

3.6.5.கோர்டன் கிறெய்க்கின் தாக்கமும் அவரது நவீன அரங்கினை இனங்கண்டு கொள்ளுதலும் 149

3.6.6.அடோ்.ஃல்ப் அப்பியாவின் தாக்கமும் அவரது நவீன அரங்கினை இனங்கண்டு கொள்ளுதலும் 149-150

3.6.7.மக்ஸ்றைன்ஹாற் தாக்கமும் அவரது நவீன அரங்கினை இனங்கண்டு கொள்ளுதலும் 150-151

3.6.8.ஏர்வின் பிஸ்கற்றோரின் தாக்கமும் அவரின் அரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 151

3.6.9.போற்றோல் பிறெக்ற்றின் தாக்கமும் அவரின் அரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 152

3.6.10.ஆற்வார்டின் தாக்கமும் அவரின் நவீன அரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 153

3.6.11.குரோட்டோவஸ்கியின் தாக்கமும் அவரின் நவீனஅரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 153

3.6.12.ஒகஸ்தாபோலின் தாக்கமும் அவரின் நவீன அரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 153-155

3.6.13.பீற்றர் புறுாக்கின் தாக்கமும் அவரின் நவீன அரங்கைப் புரிந்து கொள்ளுதலும் 155-157

3.7. கீழைத்தேய பண்பாட்டில் அரங்கப் பாரம்பரியம் 158-159

3.7.1.சீனப் பண்பாட்டில் அரங்கு 159-161

3.7.2.யப்பானிய பண்பாட்டில் அரங்கு 161-165

3.7.3.இந்தியப் பண்பாட்டில் அரங்கு 165-166

3.7.4.இலங்கைப் பண்பாட்டில் அரங்கு 166-168

3.7.5.கிழக்கிலங்கைப் பண்பாட்டில் அரங்கும், அடிக்குறிப்பும் : 168-177

அத்தியாயம் நான்கு

கிழக்கிலங்கையின் நவீன நாடக மரபு

4.1. கிழக்கிலங்கை ஓர் அறிமுகம் 178-180

4.2. கிழக்கிலங்கையில் நவீன நாடகத்தின் தோற்றம் 180-187

4.3. கிழக்கிலங்கையில் நடைபெற்ற நவீன நாடகவாக்க முயற்சிகள் 187-188

4.4. கலைக்கழகங்கள், நாடக மன்றங்கள், குழுக்கள் ஊடாக வெளிவந்த நவீன நாடக முயற்சிகள் 189-193

4.4.1.கிழக்கு இலங்கையில் இனங்காணப்பட்ட நவீனதமிழ் நாடகக் குழுக்கள் 193-222

4.4.2.கலைக்கழகங்கள், குழுக்கள், நாடக மன்றங்களுக்கூடாக இனங்காணப்படும் நவீன தமிழ்நாடக வடிவங்கள் 223-225

4.4.3. இத்தகையோர் செய்த நாடகங்களின் நாடகவாக்க முறைமை 225-228

4.4.3.1.அவர்களது நாடக எழுத்துருவாக்கமும் அதன் அமைப்பும் 228-232

4.4.3.2.நாடகத்தை இயற்றுதல் அல்லது உருவாக்கல் (நெறியாள்கை) 232-233

4.4.3.3.நடிப்பு உத்திகள் 233-235

4.4.3.4.காட்சி அமைப்பு 235-236

4.4.3.5.ஒளியூட்டல் 236-238

4.4.3.6.இசையும் நடனமும் 238-240

4.4.3.7.மேடைப் பொருட்கள் 240-241

4.4.3.8.இவர்களது அரங்கக் கட்டுமான வேலைகள் 241-246

4.5. இலக்கியகாரர்கள், கலைஞர்கள், கல்விமான்கள் எனக் கருதப்படும் தனிப்பட்ட முயற்சியாளர்களின் நவீன தமிழ் நாடகச் செயற்பாடுகள் 246-247

4.5.1.கிழக்கிலங்கையில் இனங்காணப்பட்ட தனிப்பட்ட நவீன நாடக முயற்சியாளர்கள் விபரம் 247-257

4.5.2.இலக்கியகாரர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் எனக் கருதப்படும் இரண்டாவது குழுவினரின் நவீன தமிழ் நாடக வடிவங்கள் 258-261

4.5.3.இத்தகைய இரண்டாவது குழுவினரின் நாடகவாக்க முறைமை 261-262

4.5.3.1.நாடக எழுத்துரு கட்டமைப்பு முறை 262-263

4.5.3.2.நாடகத் தயாரிப்பும் நெறியாள்கை முறையும் 263-265

4.5.3.3.நடிப்பு முறை 265-266

4.5.3.4.ஒளியூட்டல் முறை 266-267

4.5.3.5.காட்சி அமைப்பு 267-268

4.5.3.6.வேடஉடை, ஒப்பனை 268-269

4.5.3.7.இசையும் நடனமும் 269-271

4.5.3.8.மேடைப் பொருட்கள் 271-272

4.5.3.9.மேடை அமைப்பு முறை 272-273

4.6. நிறுவன ரீதியான அமைப்புக்களும் அதற்கூடாக வெளிவந்த நாடகவாக்க முயற்சிகளும் 273-274

4.6.1.கிழக்கிலங்கையில் இனங்காணப்பட்ட நிறுவன ரீதியான அமைப்புக்கள் 274-278

4.6.2.நிறுவன ரீதியான அமைப்புக்கள் செய்த நவீன நாடக வடிவங்கள் 279-282

4.6.3.நிறுவன ரீதியான அமைப்பினரின் நாடகவாக்கக் கட்டமைப்பும், அடிக்குறிப்பும் 282-289

அத்தியாயம் ஐந்து

5.1.ஆய்வின் பரிந்துரைப்பு முடிவுரையாக 290-295

உசாத்துணை நூல்கள் 296-297

தகவலுக்கான கலந்துரையாடல்கள் 298-299

பின்னிணைப்புக்கள் 1 300-317

பின்னிணைப்புக்கள் 2 318-323

# ஆய்விற்கான முன்னுரை

## ஆய்வுத் தலைப்பு:

“1970களின் பின் கிழக்கிலங்கையின் நவீன தமிழ் நாடகப்போக்குகள்” என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

## ஆய்வு அறிமுகம்:

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்கள் காணப்படுகின்றன. இம்மூன்று நிர்வாக மாவட்டங்களிலும் பல்லின மக்கள் வாழ்வதனால், இங்கு பல்லினப் பண்பாட்டுப் பின்புலம் மிகச் செழுமைமிக்கதாக காணப்படுகினறது. இதன் விளைவாக, கலைகளிலும் பல்லினப் பண்பாட்டுத் தாக்கமே அதிகம் உணரப்பட்டு வருகின்றது.

இவ்வாய்வுச் செயற்பாடானது கிழக்கிலங்கை தமிழ் பேசுவோரை மையமாகக் கொண்டு அவர்களின் நவீன தமிழ் நாடகப்போக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுவதால், இங்கு தமிழ் பேசுவோராக இருக்கும் தமிழர்களும், இஸ்லாமியர்களும் இடம்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று. கிழக்கிலங்கையில் தமிழ் பேசுவோராக இருக்கும் இவர்களிடையே பண்பாடும், கலைத்துவச் செயற்பாடுகளும் வேறுபடுகின்ற போதிலும் நவீன தமிழரங்கப் போக்குகள் ஒற்றுமைப்பட்டுக் காணப்படுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்க ஒன்று.

கிழக்கிலங்கையினைப் பொறுத்தவரைக்கும் பண்பாட்டின் அத்திவாரமாகவும், கலை வெளிப்படுகின்ற இடமாகவும் அமைவது அங்கு நடைபெறும் சடங்குகளும், விழாக்களுமே ஆகும். இத்தகைய சடங்குகளும், விழாக்களும் நிகழ்த்தப்படும் காலங்களில்தான் அதிக நிகழ்த்துகைக் கலைவடிவங்கள் அரங்கேறுகின்றன.

இத்தகைய பின்னணிக்கூடாக கிழக்கிலங்கை நாடக வரலாற்றினை அறிகின்ற பொழுது, இங்கு இரண்டுவிதமான நிகழ்த்துகை மரபு காணப்பட்டமையை அறியக் கூடியதாக உள்ளது. அவற்றை பாரம்பரிய, நவீன நிகழ்த்துகைகள் என அடையாளப்படுத்தலாம். இத்தகைய நிகழ்த்துகைகளில் மிகவும் புராதன நிலையில் இருந்து இன்றுவரை உணரப்படும் நிகழ்த்துகையாக பாரம்பரிய நிகழ்த்துகைகள் விளங்குகின்றன. இப்பாரம்பரிய நிகழ்த்துகைகளில் கிழக்கிலங்கைக்குரிய தனித்துவமான நிகழ்த்துகைகளாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, மகிடிக்கூத்து, பறைமேளக்கூத்து, புலிக்கூத்து, நொண்டிக்கூத்து, விலாசமெட்டுக் கூத்துக்கள் ஆகியவை காணப்படுகின்றன. இவை இன்றுவரை பயில் முறையில் இருப்பது குறிப்பிடத்தக்கன.

இவற்றைப் போல சிறு நிகழ்த்துகைகளாக இருக்கும் கலைவடிவங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி, வில்லிசை, உடுக்குச்சிந்து, காவியமேற்றல், கவி பாடல், ஊஞ்சற்பாட்டு, எண்ணெய்ச்சிந்து போன்ற "பா" வடிவ நிகழ்த்துகைகளும் கிழக்கிலங்கையில் பயில்முறையில் இருக்கின்றன.

கிழக்கிலங்கையில் பெரும்பாலான ஆய்வுகளும், எழுத்துக்களும் பாரம்பரிய நிகழ்த்துகை தொடர்பாகவே வெளிவந்துள்ளன. கூத்தை நவீனப்படுத்தல், மீள் உருவாக்கம் செய்தல், பாரம்பரியம் பேணல் என்ற சர்ச்சைகளும் கிழக்கிலங்கையில் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஆனால், கிழக்கிலங்கையில் நவீன நாடகங்கள் பல நிகழ்த்தப்பட்டு இருக்கின்ற போதும் அவை வெறும் வரலாற்றுத் தகவல்களாக மட்டுமே நோக்கப்படுகின்றது. அவை சரியான அணுகுமுறையில் சரியான முறையியலைப் பின்பற்றி மேற்கொண்ட ஆய்வாக அமையவில்லை. இத்தகைய நவீன நாடகங்களை சரியான அணுகுமுறையில் முழுமையாக ஆராய்ந்தால்த்தான் ஒரு பிரதேசத்தின் அரங்க வடிவம் முழுமைபெறும் என்பதனை கருத்திற் கொண்டே மேற்படி ஆய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டது.

கிழக்கிலங்கையில் ஒரு நீண்ட வரலாற்றை நவீன நாடகங்கள் கொண்டிருப்பதால் இத்தகைய ஆய்வு ஒரு நீண்ட வரலாற்றுக் காலத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஆனால் கிழக்கிலங்கையின் வரலாற்றில் இடம்பெற்ற அனர்த்தங்களான சூறாவளி, கடற்கோள், உள்நாட்டு யுத்தம் போன்றன பல வரலாற்றுத் தகவல்களை அழித்து விட்டதை உணரமுடிவதால் 1970ஆம் ஆண்டிலிருந்து எழுந்த நவீன நாடக முயற்சிகள் பற்றிய தகவல்களை மிகக்கவனமாக ஆராய்ந்து இவ்வாய்வினை முன்னெடுக்க வேண்டி உள்ளது.

கிழக்கின் நவீன நாடகச் செயற்பாடுகளைப் பார்க்கின்ற பொழுது மூன்று வகையான நிகழ்த்துகையாளர்களின் நிகழ்த்துகைத் தன்மைகள் நவீன நாடகமாக இனங் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது நிகழ்த்துகையாக அமைவது கலைக் கழகங்கள், நாடக மன்றங்கள், குழுக்கள் ஊடாக வெளிவந்த நவீன நாடக முயற்சிகள். இரண்டாவது நிகழ்த்துகையாக அமைவது தனிப்பட்ட முயற்சியாளர்கள் எனக் கருதப்படும் நவீன நாடகப் படைப்பாளிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள் என்போர் மூலம் வெளிவந்த நவீன நாடக முயற்சிகள். மூன்றாவது நிகழ்த்துகையாக அமைவது நிறுவன ரீதியான அமைப்புக்கள் மூலம் வெளிவந்த நவீன நாடக முயற்சிகள்.

இத்தகைய மூன்று நவீன நாடக நிகழ்த்துகையாளர்களின் நிகழ்த்துகைகளையும், அதன் வடிவ நிலைகளையும், அதன் தன்மைகளையும் இனங்கண்டு அவை மக்களிடம் எத்தகைய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன என்பது தொடர்பான கருத்துக்களை அறிந்து கொள்வதும், அது மக்களிடம் செல்வாக்கைப் பெறவில்லையாயின், அதற்குள்

இருக்கும் பலவீனம் என்ன என்பது தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதும் அது தொடர்பான ஒரு பொது முடிவினைப் பெறுவதும் இவ் ஆய்வின் முக்கிய பணியாகும்.

சர்வதேசிய நவீன அரங்கச் சூழலின் தாக்கங்கள், எமது கிழக்கிலங்கைச் சூழலிலும் உள்வாங்கப்பட்டு இருக்கின்றதா? இல்லையா? என்ற தர்க்க நிலையான நிலைப்பாட்டையும் கண்டுகொள்ள இவ் ஆய்வு வாய்ப்பினை வழங்கும்.

ஈழத்துத் தமிழ்ச்சூழலில் கிழக்கிலங்கைக்குரிய தனித்துவம்மிக்க நவீன நாடக முறைமையை மேற்படி நாடக முயற்சியாளர்களின் முயற்சிகளில் இருந்து இனங் காண்பதும், இனங்காணப்படவில்லையாயின் அதற்கான கருத்தியல்களை வழங்கத்தக்க அணுகுமுறைகளை உருவாக்கி விடுவதும், நவீன நாடகம் தொடர்பான ஒரு வடிவ நிலைகளைக் கண்டுகொள்வதற்கான முயற்சியினையும் இவ்வாய்வு கொண்டுவரும்.

### ஆய்வுப் பிரச்சினை:

கிழக்கிலங்கையில் தமிழ் நவீன நாடகம் பற்றிய ஆய்வுகள் இதுவரை காலமும் விரிவாகவும், ஆழமான முறையிலும் ஆராயப்படவில்லை. ஆராயப்பட்டிருக்கும் சில பகுதிகள் வரலாற்று நோக்குடையவையாக மட்டும் காணப்படுகின்றன.

கிழக்கிலங்கையில் 1970களின் பின்னர் பல நவீன நாடகப் படைப்பாக்க முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன என்ற ஆய்வாளர் கருத்துக்கள் வெறும் தகவல்களாக மாத்திரம் இருப்பதனால், இந்த ஆய்வின் மூலம் தகவல்கள், நாடகவியல் சார்பான அம்சங்களுக்கூடாக ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்படும்.

கிழக்கிலங்கையில் நவீன நாடகங்கள் பல செய்யப்பட்டிருக்கின்றன. அவை மேற்கத்தேய நவீன நாடகங்களைப் போல அல்லாமல் கிழக்கிலங்கைக்குரிய தனித்துவமான முறையில் உருவாகி இருக்கின்றன. அவை கிழக்கிலங்கைக்குரிய தனித்துவமான முறையில் உருவாகியிருப்பினும், அவை மக்கள் மத்தியில் பெரியளவான செல்வாக்கைப் பெறவில்லை. அவை மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறவில்லையாயின் அதற்குள் பல பலவீனங்கள் காணப்படுவது என்பதும் ஆய்வுப் பிரச்சினையாகும்.

நவீன நாடகம் என்பது கிழக்கிலங்கையில் எவ்வாறு உருவாகியது? அது எங்கிருந்து வந்தது? நவீனம் என்று சொல்லத்தக்க நாடகங்கள் யாவை? அவை எந்த பின்னணிக்கூடாக வந்த நவீனத்துவத்தைக் காட்டுகின்றது?இங்கு நவீனத்துவத்திற்கான ஒரு வடிவநிலை இருக்கின்றதா? இங்கிருக்கும் நவீன நாடகம் எங்களது பண்பாடுகளில் இருந்து உருவானதா? அல்லது பிறபண்பாடுகளின் தாக்கங்களால் உருவானதா?

அல்லது கிழக்கிலங்கையில் தமிழ்பேசும் மக்களின் தனித்துவமான முறையினால் உருவானதா? போன்ற பல பிரச்சினைகளை முன்வைத்து இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கிலங்கை நாடக வரலாற்றில் நவீன தமிழ் நாடக ஆற்றுகைகள் பல இடம் பெற்றிருக்கின்றன. இவைகளில் நேரடியாகப் பார்க்க முடிந்தவைகளையும், நேரடியாகப் பார்க்க முடியாதவைகளையும் வைத்துக்கொண்டு இவ் ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நேரடியாகப் பார்க்கமுடியாத நாடக ஆற்றுகைகள் பற்றிய தகவல்களை பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், விமர்சனக் குறிப்புக்கள், ஆற்றுகையில் பங்கு பற்றியோரின் குறிப்புக்கள், ஆற்றுகைகளைப் பார்த்த பார்வையாளர்கள், நெறியாளர்கள் ஆகியோரது கதைகள், எடுத்துரைப்புக்கள், புகைப்படங்கள், இறுவெட்டுக்களில் பதிவு செய்யப்பட்ட நிகழ்த்துகைகள், வீடியோ சாதனங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## ஆய்வு எல்லை/வரையறை:

இந்த ஆய்வு கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் மையமாகக் கொண்டு இடம்பெறும்.

1970களின் பின் நடைபெற்ற நவீன தமிழ் அரங்க முயற்சிகளான கலைக்கழகங்கள், மன்றங்கள், தனிப்பட்டோர் நிகழ்த்திய நிகழ்த்துகைகள், நிறுவனரீதியான அமைப்புக்கள் (உயர்கல்வி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட நிகழ்த்துகைகள்) என்பனவற்றுடன் நிகழ்த்துகைப் பிரதிகளும் ஆய்வு எல்லைக்குள் அடங்கும்.

## ஆய்வின் நோக்கம்:

ஈழத்து தமிழர் மத்தியில் சிறப்பான வளர்ச்சியினை நவீன நாடகங்கள் பெற்றுள்ளமை ஆய்வாளர்களது ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழர்கள் எதிர் கொண்ட சமூகமாற்றம், உள்நாட்டு யுத்தம், இயற்கை அனர்த்தம், இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட அகதி வாழ்க்கை, அதனால் ஏற்பட்டுள்ள உள நெருக்கடிகள் போன்றவற்றின் மத்தியிலும் நவீன தமிழ் அரங்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் ஏற்பட்ட இவ்வளர்ச்சியின் தாக்கம் 1970களின் பின் கிழக்கிலங்கையிலும் ஏற்படுகிறது.

கிழக்கிலங்கையில் காலனித்துவ, பின்காலனித்துவ சூழலில் அதன் விளைவுகளால் சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட மாற்றங்கள் நவீன தமிழ் அரங்கிலும் ஏற்பட்டு இருக்க வேண்டும். இத்தகைய மாற்றங்கள் யாது? மாற்றங்களின் வடிவங்கள் யாது? என்பதையும் அதன் பலம், பலவீனங்களை ஆராய்வது மிக முக்கியமாகும்.

கிழக்கிலங்கையில் செய்யப்பட்ட நவீன நாடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறவில்லை என்ற பிரச்சினையில் இருந்து அதற்குள் பல பலவீனங்கள் காணப்படுவதை உணரலாம். அத்தகைய பலவீனங்கள் என்ன என்பதை இனங்கண்டு அவற்றின் போதாமைகளை நிவர்த்தி செய்யத்தக்கவகையில் வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதும், கிழக்கிலங்கை தமிழ் பேசுவோரின் நவீன தமிழ் நாடகத்தைக் கண்டுகொள்வதும், கிழக்கிலங்கையில் நவீன நாடகம் எவ்வாறு வளர்ந்தது என்பதை அறிவதுடன், அதன் தாக்கங்களை அறிவதும், அதன் ஆழ அகல அம்சங்களை அறிவதும், அதன் பலம் பலவீனங்களை ஆராய்வதும், ஈழத்து நவீன தமிழ் அரங்கினை இனங்கண்டு கொள்வதும் இவ் ஆய்வினுள் இடம்பெறும்.

எல்லோரும் விரும்பி மகிழத்தக்க நவீன காலத்திற்குரிய நவீன தமிழ் அரங்கை கண்டு கொள்வதற்கான வழிகளைக் கண்டுகொள்வதும், கிழக்கிலங்கை தமிழ் நாடக வடிவநிலைக் கண்டுபிடிப்பு தொடர்பான கருத்தியலைத் தூண்டி அதனை வளர்த்துச் சென்று முடிவினை முன்வைப்பதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## தரவுகளும் ஆய்வு முறையியலும்:

### முதனிலைத் தரவு:

ஈழத்து நவீன நாடகச் சூழலில் இதுவரை காலமும் நடைபெற்ற நாடகங்களின் நிகழ்த்துகைகளும், தொழில்நுட்பச் சாதனங்களில் பதிவேற்றப்பட்ட நிகழ்த்துகைகளும், (ஒலி, ஒளிப்பதிவுகள்) நிகழ்த்துகைப் பிரதிகளும் முதனிலைத் தரவுகளாகும்.

### இரண்டாம் நிலைத்தரவு:

கிழக்கிலங்கை நவீன நாடகச்சூழல் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், மதிப்புரைகள், விமர்சனங்கள் ஆகியன இரண்டாம் நிலைத்தரவுகள் ஆகும்.

## ஆய்வு முறையியல்:

இவ்வாய்வு, விபரணத்தோடு இணைந்த விமர்சன முறையியலையும், பகுப்பு முறையியலையும் அடிப்படையாகக் கொண்டது. குறிப்பாக கள ஆய்வு முறையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் பேட்டிகாணல், வினாக்கொத்து, தனியாள்விபரண முறை போன்ற உத்திகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.